அழகு சாதனப்
பொருட்கள்
பாக்ஸ், பேஸ், தொப்பி
வகைகள்
குடைகள், விளையாட்டு
பொருட்களை
சில்லறையாகவு
மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ள

LUCKY-7
61 New West Market,
Jaffna.

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ2/50

சிகை
அலங்கரிப்பாளர்களே!
உங்களுக்குத் தேவையான
சகல ஆயுதங்களையும்
ஏனைய பொருட்களையும்
மலிவாக வாங்க
எம்மை நாடுங்கள்

லக்கி - 7
61, புதிய மேற்கு சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஆடி மீ 19உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 30 (03 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 206

# சகல குழுக்கள் கொண்ட சமாதானக் கமிட்டி

## வடக்கு-கிழக்கில் அமைக்க புதுடில்லிப் பேச்சில் இணக்கம்

### ராஜீவ் - ரஞ்சன் மீண்டும் பேசினர்

புதுடில்லி, ஆகஸ்ட். 3

வடக்கு — கிழக்கில் உள்ள சகல தமிழ்க்குழுக்களும் அங்கம் வகிக்கும் சமாதானக் கமிட்டி ஒன்றை அமைப்பது குறித்து இரு அரசுகளும் பெரும்பாலும் உடன்பாடு கண்டிருப்பதாக இலங்கைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ராஜதந்திரி ஒருவரை ஆதாரங்காட்டி இத் தகவல் வெளியிடப்பட்டது.

இதேவேளை அமைதிப்படை விலகல் பற்றிய கால அட்டவணை அதிகாரப்பகிர்வு ஆகியன குறித்து ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்குவது சம்பந்தமாக பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவும் இரண்டாவது தடவையாக நேற்றுக்காலை மீண்டும் பேச்சு நடத்தினர்.

இலங்கை ராஜதந்திரி தெரிவித்த தகவல்களின் பிரகாரம், இலங்கை — இந்திய தூதுக்குழுக்களுக்கிடையே ஏற்பட்ட இணக்கத்தின் பிரகாரம் —

★ யுத்த நிறுத்தம்.

★ அமைதிப் படை வாபஸ்.

★ வடக்கு—கிழக்கு மாகாணத்தில் சகஜ நிலையை ஏற்படுத்துதல்.

ஆகியன பேச்சு வடிவில் தயாராகும் உத்தேச உடன்பாட்டில் இடம்பெறும்.

தமிழருக்குக் கூடுதல் சுயாட்சி கொடுப்பதாக இந்த உடன்பாடு இருக்காது. ஆனால் மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் சட்டங்களை நிறைவேற்ற உடன்பாட்டில் வழி செய்யப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ரெனிக்கு மீண்டும் நீதிமன்றம் நோட்டீஸ்!

முன்னாள் நீதி அமைச்சர் ரெனி டி மெல் மீது கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி இரண்டாவது தடவையாக நோட்டீஸ் பிறப்பித்தார்.

வெளிநாட்டில் இருக்கும் திரு. ரெனி டி மெல்லிடம் இண்டர்போல் உதவியுடன் முதலாவது நீதிமன்ற நோட்டீஸைக் கையளிக்க எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை என்று இரகசியப் பொலீஸார் கடந்த திங்கட்கிழமை நீதிபதியிடம் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அடுத்த மாதம் 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று திரு. ரெனிக்கு நோட்டீஸ் அனுப்பும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

நீதி அமைச்சராக இருந்த சமயம் பணம் கையாடல் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் திரு. ரெனி மீது இரகசியப் பொலீஸாரால் சுமத்தப்பட்டுள்ளன. (ஒ-எ)

## புதுடில்லிப் பேச்சு: சிறிமாவோ அறிக்கை

புதுடில்லிப் பேச்சுக்களை சுதந்திரக்கட்சி உன்னிப்பாகக் கவனித்து வருவதாக எதிர்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

கடந்த சில தினங்களில் தென் இலங்கையில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

நாட்டின் பொருளாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருள் பற்றாக்குறையால் மக்கள் கஷ்டமடைகின்றனர்.

அமைதிப்படை விலகல் விவகாரத்தில் ஜனாதிபதி பிரேமதாசா மிகவும் ராஜதந்திரமாக நடந்து கொண்டிருந்திருப்பின் இக் கஷ்டங்களை எல்லாம் தவிர்த்திருக்க முடியும்.

புதுடில்லியில் இடம்பெறும் பேச்சுக்களின் பெறுபேறு தெரிந்த பின்னரே எம்மால் கருத்து வெளியிட முடியும்:

— இப்படி திருமதி சிறிமாவே பண்டாரநாயக்கா தனது அறிக்கையில் தெரிவித்தார். (ஒ-எ)

### கொடிகாமத்தில்

மாலை நேரங்களில் கொடிகாமம் பகுதியில் ஷெல் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்பதால் கொடிகாமத்தில் பதற்றம் நிலவுகிறது. (இ-75)

## கேரதீவு-சங்குப்பிட்டி கடலில் புதிய இயந்திரப் பாதை

### சேவை அடுத்த வாரம் ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஆக: 3

அடுத்த வாரம் முதல் கேரதீவு-சங்குப்பிட்டி கடலில் புதிய இயந்திரப் பாதை ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது:

இப்பாதையில் சுமார் 10 தொன் எடையுள்ள வாகனங்களை ஏற்றி இறக்கக்கூடியதாக இருக்கும்:

ஏற்கனவே இங்கு சேவையில் ஈடுபட்டிருக்கும் பாதை பழுதடையும் நிலையில் இருப்பதன் காரணமாகவே இந்தப் புதிய பாதையும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை காரைநகர் - ஊர்காவற்றுறை கடலில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக மற்றுமொரு புதிய பாதை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது; (ஓ-10)

## கொழும்புசெட்டித்தெருவில் 8 கடைகள் சாம்பராகின!

கொழும்பு, ஆக: 3

கொழும்பு செட்டியார் தெருவில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஏற்பட்ட பெரிய தீ விபத்தில் குறைந்தது 8 கடைகள் முற்றாக எரிந்து சாம்பராகின. பத்துக் கடைகள் சேதமடைந்தன. ஐந்து லாம்பு சந்தி அருகே இருந்த கடைத்தொகுதி ஒன்றில்தான் இரவு 8-30 மணியளவில் தீப்பற்றிக்கொண்டது.

ஒன்பது தீயணைப்பு வண்டிகள் இரவு 10 மணி வரையிலும் தீயுடன் போராடி அதனை அணைத்தன. ஒரு நகைக்கடையும் தீக்கிரையானது என்றுசொல்லப்பட்டது.

மின் ஒழுக்கு காரணமாகவே தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுவதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன: (ஒ-எ)

## யாழ். யுவதிகள் பொலீஸுக்குத் தெரிவு!

யாழ்ப்பாணம், ஆக. 3

பொலீஸ் பதவிகளுக்கு வடபகுதியில் இருந்து தமிழ் யுவதிகள் சிலர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து யுவதிகள் பலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் தகுதியான சிலர் பொலீஸ் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக நம்பகரமாக அறிய வந்துள்ளது.

வடபகுதியில் இருந்து தமிழ் யுவதிகள் பொலீஸ் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டது இதுவே முதற்தடவை என்று பொலீஸ்வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது. (ஓ-10)

## யாழ். ரயில் சேவை குறித்து இன்னும் முடிவு இல்லை

யாழ்ப்பாணம், ஆக: 3

கடந்த சில தினங்களாக கொழும்பு-வவுனியா ரயில் சேவைகள் நடைபெற்று வருகின்றன:

வார இறுதியில் நடக்கும் யாழ்ப்பாணத்துக்கான பயணிகள் ரயில் சேவை குறித்து யாழ் ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் அநுராதபுரம் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது கொழும்பில் இருந்து பதில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதாம்.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்துக்கான ரயில்சேவை குறித்துத் திட்டவட்டமாக எதையும் கூற முடியாமல் இருப்பதாக ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் இங்கு தெரிவித்தனர். (ஓ 3)

### சுபநேரம்

ஆடி 19 — வியாழக்கிழமை
நக்ஷத்திரம்: மகம்
சுபநேரம்
07.34 முதல் 09.04 வரை
ராகுகாலம்
01.34 முதல் 03.04 வரை

## மின் தடை காரணமாக 10 ஆயிரம் தொழிலாளர்கள் வடக்கில் வேலை இழப்பு!

யாழ்ப்பாணம், ஆக: 3

மின்தடை காரணமாக வடமாகாணத்தில் சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். 2 ஆயிரத்து 360 தொழிலகங்கள் வேலை செய்யமுடியாது மூடிக் கிடக்கின்றன.

கடந்த பல வாரங்களாக மின்தடை ஏற்பட்டுள்ளதால் வடமாகாணத்தில் உள்ள தொழிலகங்களுக்கு முடிவிழா நடந்துள்ளது.

தேங்காய்எண்ணெய் ஆலை, வெல்டிங், கட்டட வேலைகள், கல்லுடைக்கும் தொழில், விவசாய இயந்திரங்கள் திருத்தும் தொழிலகங்கள் ஆகியன உட்படப் பல்வேறுபட்ட தொழிலகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் இயங்கும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலகங்களில்வேலை பார்க்கும் சுமார் எண்ணாயிரம் தொழிலாளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் 80 தொழிலகங்களில் வேலை பார்க்கும் 250 தொழிலாளர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் 175 தொழிலகங்களில் வேலைபார்க்கும் 600 தொழிலாளர்களும், வவுனியா மாவட்டத்தில் இயங்கும் 115 தொழிலகங்களில் வேலைபார்க்கும் 350 தொழிலாளர்களும் வேலை இழந்துள்ளதாக தொழில் திணைக்கள

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்று விநியோகம்

கொழும்பில்தேங்கிக்கிடந்த வடபகுதிக்கான தபால் பொதிகள் அனைத்தும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். தபால் அலுவலகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

இவை நேற்று விநியோகிக்கப்பட்டன. (ஓ-10)

## கொழும்பில் நேற்றிரவு குண்டு வெடிப்புக்கள்!

கொழும்பு, ஆக. 3

கொழும்பு நகரில் நேற்று இரவுஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் மூன்று பெரிய குண்டுகள் ஒரே சமயத்தில் வெவ்வேறு இடங்களில் வெடித்தன:

புறக்கோட்டை, பொரளை, ஹவ்லக் டவுனில் உள்ள பொலீஸ் தலைமைக்காரியாலயம் ஆகிய பகுதிகளில் இக் குண்டுகள் வெடித்தன.

ஆறு பொலீஸாரும் சில பாதசாரிகளும் குண்டுகள் வெடித்த போது காயமடைந்தனர்.

மற்ற இரண்டு குண்டு வெடிப்புக்களினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றி இன்னும் விவரம் தெரியவில்லை. (ஓ-எ)

## இன்று பெறுபேறு தெரியும்?

புதுடில்லி, ஆக. 3

புதுடில்லிப் பேச்சுக்களின் பெறுபேறு இன்று காலைதான் தெரியவரும் என்று பி.பி.சி நேற்று இரவு அறிவித்தது.

வெளிறவுஅதிகாரிகளை ஆதாரம் காட்டி இதனை பி.பி.சி தெரிவித்தது.

எப்படியாவது அமைதிப் படை விலகும் திட்டவட்டமான திகதியைஇந்தியாவிடம் இருந்து பெற்றுக் கொண்டு போவதில் இலங்கை அரசுக்குழு பிடிவாதமாக இருக்கிறது:

இந்தியப்பிரதமரும் பேச்சுக்கள் சாதகமாக முடிய வேண்டும் என்பதில்அக்கறைகாட்டி வருகிறார்:

ஆனால் அமைதிப்படைவிலகலுக்கு திட்டவட்டமான திகதி ஒன்றை பிரதமர்காந்தி அறிவிப்பாரா என்பது கேள்விக் குறியாக உள்ளது.

இப்படி பி.பி.சி தெரிவித்தது (அ-எ)

### வாகனம் கடத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 3

இலங்கை மின்சாரசபையின் யாழ் பிரிவுக்குரிய 'எல்வ்'பிக்அப் வாகனம் ஒன்றுகிளிநொச்சிப் பகுதியில் வைத்து நேற்று நண்பகல் இனந்தெரியாதோரினால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது:

## முதல்வர் புதுடில்லி விரைவு

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் நேற்று திருகோணமலையில் இருந்து இந்திய விமானப்படை விமானம் ஒன்றின்மூலம் புதுடில்லிக்குப் பயணமானார்,

புதுடில்லிப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக இரண்டு நாடுகளின் அரசுகளின் அழைப்பின்பேரிலேயே திரு. வரதராஜப்பெருமாள் புதுடில்லி சென்றுள்ளார் எனக் கூறப்பட்டது.

முதலமைச்சருடன் யாழ். மாவட்ட எம். பி. திரு. க. பிரேமச்சந்திரனும் மாகாண போக்குவரத்து அமைச்சர் ஜனாப் அபுயூசுபும் மூன்று உயரதிகாரிகளும்சென்றுள்ளனர்.

'புதுடில்லிப் பேச்சுக்களில் வடக்கு-கிழக்கு மாகாண அரசுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வகைசெய்ய வேண்டும் என்றும் புதுடில்லிப் பேச்சு முத்தரப்பாக அமைய வேண்டும் என்றும் நான் வலியுறுத்திவந்தேன். இதை இந்தியாவும் இலங்கையும் ஏற்றுக் கொண்டுள்ளதையே இது காட்டுகிறது': இப்படி வரதராஜப்பெருமாள் திருகோணமலையைவிட்டுப் புறப்படுமுன்னர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

### முச்சந்தி முரளி



எங்கடை பொம்பிளைப் பிள்ளையளும் துணிஞ்சிட்டினம் பாத்தியளே ......!

## பரந்தனில் தேடுதல்!

பரந்தன் பகுதியில் நேற்று அதிகாலை முதல் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. சிலர் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

இதே வேளை கிளிநொச்சி நகரில் பழைய பஸ் நிலையம், கரடிப்போக்குச் சந்தி போன்ற இடங்களில் புதிதாக 'சென்றி'கள் அமைக்கப்பட்டுள்ளன:

இவ்வழியாகச் செல்லும் வாகனங்கள் சோதனையிடப்படுகின்றன. (ஓ-163

## வல்வையில் நேற்று மோதல்

வல்வெட்டித்துறை ஆகஸ்ட் 3

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று நண்பகல் முதல் பெரும் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றன.

இந்த மோதல் சம்பவங்களில் சில ஜவான்கள் உயிரிழந்ததாகவும், சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம் பற்றி ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

எனினும் பல கடைகளும், குடியிருப்புகளும் ஷெல் தாக்குதல்களினால் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது?

வல்லை முகாமிலிருந்து படையினர் வல்வைச்சந்தியை நோக்கி இரு பிரிவுகளாக முன்னேறியபோதே மோதல் சம்பவம் ஏற்பட்டது.

வல்வை உதயசூரியன் மதவடி, பெற்றோல்நிலயப் பகுதி ஆகிய இடங்களிலேயே மோதல் ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பினரும் ஷெல் குண்டுகளைப் பாவித்ததாகவும் கூறப்பட்டது.

சிவன்கோவிலடி வீதி. மதவடி வீதி போன்ற இடங்களில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில்நேற்றுமாலை ஊரடங்கு: ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக 3

நெல்லியடியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும்நேற்று மாலை நான்கு மணியிலிருந்து உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

ஊரடங்கு அறிவிப்பை அறியாமல் சென்ற வாகனங்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது:

பருத்தித்துறையிலிருந்து யாழ் நோக்கி வந்த மண் லொறி ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் லொறிச் சாரதியான தெல்லிப்பளையைச் சேர்ந்த இ. இராசையா (வயது 34) என்பவர் காயமடைந்தார்.

இவர் பின்னர் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்; (ஓ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ் சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

நட்டச்சு, கருக்கெழுத்து, பாட்டு, வயலின், மிருதங்கம், நாட்டியம், ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் திணைக்களப் பரீட்சகர் தலைமையில், பாலர்முதல் பல்கலைக்கழகத் தரம்வரை ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றன. கலா நிலையம் மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை. (11664)

A/L 89, 90, 91 வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறுகின்றன: மேலதிக விபரத்திற்கு நிர்வாகியைச் சந்திக்கவும். மொடேன் ரியூசன் சென்ரர், கரவெட்டி, இன், பருத்தித்துறை. (1344)

### விற்பனைக்கு

கதிரை, மேசை, கண்ணடி மேசை, ட்றங்பெட்டி, மின்சார உபகரணங்கள் (றேடியோ, கிறைண்டர், கமித்) மற்றும் சமையல் உபகரணங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குமதி, ரதி இராசநாயகம், No 1, கென்ஸ்மன் வீதி சாவகச்சேரி. (1345)

மணிக்கூட்டுக் கடைக்குத் தேவையான சகல சாமான்களும், நல்ல நிலையில் உள்ள C.90யும் விற்பனைக்குண்டு. K. R. K வாச் வேக்,18 A. பஸ்நிலையம் (K. K. S. பஸ் தரிப்பு முன்பாக) (1343)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளை நிறப்பு, பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், Hybro புறொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம் சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052)

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள். சேவற் குஞ்சுகள் 2 ஆம் திகதி புதன்கிழமையும் Hybro புறொயிலர் குஞ்சுகள் 3 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1327)

### பழைய புத்தகங்கள் விற்பனைக்கு

Second Hand Book House 13/6, ஸ்ரான்லி றோட். (முரசொலி இலங்கை வங்கிக்கு முன் பட்டப்படிப்புக் கல்லூரி லேன்): (1346)

### அளவையியல் II

ஆசிரியர் கேசவன் எழுதிய 1989 ஆம் ஆண்டு ஆவணிப் பரீட்சைக்குரிய அளவையியல் வினா-விடைக் களஞ்சியம் பகுதி II. யாழ்நகர் பிரபல புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் விலை ரூ. 30/ (1325)

### தேவை

ஆண்கள் பெண்கள் குழந்தைகளுக்குரிய ஆடைகளை நவீன பாணிகளில் அழகாகத் தைத்துக் குறித்த தவணையில் பெற்றுக் கொள்வதற்கு Super Tailors, Vembady Road, Jaffna. மகளிர் ஆடைகள் தைப்பதில் அனுபவம் உள்ள பெண் பணியாளர் தேவை. நேரில் வரவும். (11684)

### மணமகன் தேவை

சைவ போசன யாழ்ப்பாண இந்து வேளாளர் 31 வயது பெண்ணுக்கு Professional வங்கியாளர் பட்டதாரி மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (11650)

### தவறிவிட்டது

எனது 331313238V இலக்க முடைய அடையாள அட்டை மாவிட்டபுரம் கந்தசாமி தேர்த் திருவிழா அன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். ஆ. சண்முகநாதன் 420 (612) காங்கேசன்துறை வீதி, பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவில் முன்பாக யாழ்ப்பாணம் (1347)

---

## விக்னு டியூசன் சென்ரர்

************

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

**A/L 90, 91 பிரிவு**

வழமையான நேர அட்டவணைப்படி

ஆரம்பம்: 05-08-89

**O/L ஆண்டு**

10, 9, 8, 7, 6 வகுப்புகள்

Day / Evening Classes

வழமையான நேர அட்டவணைப்படி

ஆரம்பம்: 02-08-89

**புதிய O/L** Day 8 30 — 1 30, Evening 3 00 — 5 00

வகுப்புக்கள் ஆரம்பம்: 04- 8-89

**புதிய AL 91** கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பம்

புதிய பிரிவு II 05-08-89 (8:00 a m:)

[சி-2934]

---

## சகல வகுப்புக்களும் ஆரம்பம்: 05. 08. 1989

[C.I.M.A, I.D.P.M, I.A.B, A.A.T, (Sri Lanka & London) Chartered Sri Lanka]

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE,**

14, St PETERS LANE, JAFFNA.

(சி/2937)

---

## A. A. T (Inter) I. A. B Inter & Finals)

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:

05. 08. 1989

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. PETERS LANE, JAFFNA.

(சி/2936)

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவமணி சோமலிங்கம்

தோற்றம்: 08-06-1930 — மறைவு: 06 08-1983

திதி: 03 08-1989

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும், உங்கள் நினைவு எம்மை விட்டு மறைவதில்லை நீங்கள் ஏற்றி வைத்த தீபங்கள் — என்றுமே ஒளி தந்து கொண்டே இருக்கும்!

உங்களை நினைந்து துயரில் வாடிக்கொண்டிருக்கும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

265, ஆடியபாதறோட், நல்லூர். (1418)

---

## நன்றி நவிலல்

8 ஆம் நாள் அஞ்சலி



### திரு ந. தருமராசா

(சின்னவன்)

(தருமபுரம் கௌரியம்பாள் ஆலய பரிபாலகர் திருமதி நடேசன் அன்னமாவின் அன்பு மகன்)

தருமபுரத்தைச் சேர்ந்த திரு. திருமதி நடேசன் தம்பதிகளின் அன்பு மகன் ந. தருமராசா 26-07-89இல் அகாலமரணமானார். இவர் தங்கராசா, நாகரத்தினம், அரசசிங்கம், அமராவதி, மாலினி ஆகியோரின் சகோதரரும் இரஞ்சிதம், காலம் சென்ற இராசையா, இந்திராணி, இராகுலன், நேசம்மா, பார்வதி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் அருணாசலம் தம்பதிகள் (அரசினர் வைத்தியசாலை மட்டக்களப்பு), லட்சுமி காரைதீவு அரசினர் வைத்தியசாலை) என்போரின் நெருங்கிய உறவினருமாவார். அன்னாரின் தகனக் கிரியைகள் 26-07-89 இல் தருமபுரம் மயானத்தில் நடைபெற்றது என்பதைத் தெரிவிப்பதுடன், எமக்குச் சகல விதத்திலும் ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ந. அரசசிங்கம் (சகோதரர்) தருமபுரம்.

(C/3148)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### க. வி. கதிரவேலு

(Charted Accountant)

தோற்றம்: 08- 12- 1903 — மறைவு: 28- 07- 1987

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

நாளை வெள்ளிக்கிழமை (04- 08- 89) அவரது இரண்டாவது ஆண்டை நினைவு கூருகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"Agricolas" பழைய டச் வீதி, பத்தமேனி, அச்சுவேலி. (1423)

---

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்: 05 07.1964

ஆண்டவன் அடியில்: 04 07.1989



### செல்வி நமசிவாயம் புவனேஸ்வரி

(முத்துத்தம்பி மகாவித்தியாலயம் பழைய மாணவி)

எம் இனிய மகளே! எங்கு சென்றாயோ? குடும்பத்தின் ஒளிவிளக்காய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய்; பொறுமையின் உறைவிடமாய் எமக்கெல்லாம் ஒளி வீசி இடையில் எம்மை மீளாத ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டகன்ற எங்கள் அன்புத் தெய்வமே! இன்றைய 31ஆம் நாளை நினைவு கூர்ந்து உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:

அன்புத் தாயார், சகோதர சகோதரிகள், உறவினர்கள்.

2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (1422)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி சதாசிவம் செல்லம்மா

(பாலு)

தோற்றம்: 12- 10- 1919 — மறைவு: 13- 08 1988

திதி: 03- 08- 1989

எங்கள் இதயதீப அம்மாவே!

அம்மா! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காயிருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய எங்கள் அன்புத்தாயே! அம்மா! ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களைவிட்டு அகலாது அம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

உங்கள் பிரிவால் துயருறும்:

மக்கள், மருமகள் பேரப்பிள்ளைகள்.

புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரம். (1294)

---

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

03- 08 1989

தாயின் மடியில்: 27. 08. 1962

மண்ணின் மடியில்: 08. 02. 1989



### திரு. ஆறுமுகம் மகேந்திரம்

(செல்லந்தம்பி)

எங்கள் குலத்துதித்த இளஞ் சிங்கமே!
எமக்குப் பூட்டப்பட்ட விலங்குகளை
உடைத்தெறிய - எண்ணினாய்
செல்லந்தம்பி எனவே உன்- இனிய
நண்பர்களால் பாசமுடன் அழைக்கப்பட்டாய்
நீ நடந்த பாதையை - எண்ணி
பெருமிதமடைகின்றோம் ஐயனே!
உன் நினைவலைகள் எம்மைத்
தினமும் வாட்டுகிறதே!

அண்ணலாரின் அந்தியேட்டிக்கிரியையிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

—குடும்பத்தினர்.

2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (1341)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
பொருளானும் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானும் மாணாப் பிறப்பு.

**பொருள்:**
பொருளால் எல்லாம் ஆகும் என்று பிறர்க்கு ஒன்றும் கொடுக்காமல் இறுகப்பற்றிய மயக்கத்தால் சிறப்பில்லாத பிறவி உண்டாம்.

உதயன்
இல 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 23073
03 - 08 - 1989 த. பெ: இல. 23

# சமகால நடவடிக்கை வேண்டும்

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. வெளிநாட்டு மூலதனத்தை வருந்தி அழைக்க வேண்டிய கட்டாயம். இந்தச் சூழ்நிலையில் பொருளாதாரக் கட்டமைப்பை மறு சீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இதனை நாம் மட்டும் கூறவில்லை. ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவும் ஒளிவு மறைவின்றி, வெளிப்படையாகக் கூறியுள்ளார். பொருளாதார அதிகார உடைமையைப் பரவலாக்குவதில் நாடு தோல்வி கண்டுவிட்டது. அதனாலேயே நாட்டுத் தேவைக்கு ஏற்ப பொருளாதார வளர்ச்சியைக் காண முடியாமற் போனதாகவும் ஜனாதிபதி சொல்கிறார்.

பொருளாதார அதிகார உடைமை சரியான முறையில் பரவலாக்கப்பட்டிருப்பின், பகிர்வு செய்யப்பட்டிருப்பின் வறுமை ஒழிப்புத் திட்டம் ஒன்றுக்கு அவசியமே ஏற்பட்டிருக்காது என்பதும் ஜனாதிபதியின் நிலைப்பாடு.

வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் கடன் வசதிகள் மற்றும் நலன்புரித் திட்டங்களினால், செல்வாக்கும், வசதியும் மிக்க ஒரு சிறு கூட்டத்தினரே பலனடைய முடிந்தது என்றும் அவர் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட பள்ளங்களால் அல்லது ஓட்டைகளால், அரசியல் கிளர்ச்சிகள் மூண்டுவிட்டன. அந்தக் கிளர்ச்சிகள் நாட்டின் பொருளாதாரத்தையே அடியோடு சாய்க்கும் அளவுக்கு மோசமடைந்து விட்டன. ஜனநாயகப் பொருளாதார, அரசியல் அத்திவாரங்களையே ஆட்டம் காண வைக்கும் அளவுக்கு, நாட்டைப் பயமுறுத்தும் அளவுக்கு, சமூக இயக்கங்கள் நெருக்கடி நிலையைத் தோற்றுவித்திருக்கின்றன என்றும் ஜனாதிபதி எடுத்துக் காட்டியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தையும், பொருளாதாரக் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் அவற்றின் நடைமுறைப் பேதங்களையும் இலங்கை வங்கியின் பொன்விழாவில் பேசுகையில் ஜனாதிபதி சரியான நோக்குடன் பார்த்து, ஆழ அகலங்களை அளந்து விமர்சித்திருக்கிறார் என்றே சொல்லலாம்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் அடிக்கடி மாற்றப்பட்ட போதிலும், பல முறைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டபோதிலும், நாடு பொருளாதாரத் துறையில் பின்னடைந்து நிற்பது கண்கூடு.

பொருளாதார அதிகாரமும், உடைமையும் பரவலாக்கப்படாமல் இருப்பதே இதற்கும் பிரதான காரணம். அரசின் பொருளாதாரத் திட்டங்கள், அவை நடைமுறைப்படுத்தும்போது சமூகத்தின் சகல மட்ட மக்களுக்கும் நலன் பயக்கும் விதத்தில் அவர்களைச் சென்றடைவதில்லை.

அதேபோல, அரசியல் அதிகாரம் பரவலாக்கப்படாமல் இருப்பதும் பொருளாதாரப் பின்னடைவுக்கான முக்கியகாரணிகளில் ஒன்று என்பதை மறந்துவிட முடியாது.

அரசியலும், பொருளாதாரமும் ஒன்றுடன் மற்றது பின்னிப் பிணைந்தது. அதனால் ஒன்றைத் தவிர்த்து மற்றதைச் சீர் செய்வதன் மூலம் சமூக வளர்ச்சி காணுவது இயலாத காரியம்.

பொருளாதாரத்தைச் சீர் செய்யும் தமது முயற்சியாக, மக்கள் மயப்படுத்தலுக்கு முன்னுரிமை கொடுக்க இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். மக்கள் மயப்படுத்தல் பொருளாதாரப் பிரச்சினைக்கு முழுத் தீர்வாகுமா என்பது ஒருபுறமிருக்க — அரசியல் பிரச்சினைகளை அமுக்கி வைத்துக் கொண்டு பொருளாதாரத்தைச் சீர் செய்வது பெரும் கஷ்டம் நிறைந்த பணி. அரசியலையும், பொருளாதாரத்தையும் சீர் செய்யும் நடவடிக்கைகள் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை ஜனாதிபதி மறந்துவிடக் கூடாது.

இரண்டுமே சிரமம் மிகுந்த காரியங்கள். அவற்றைச் செய்வதில் வெற்றி காண்பதற்குப் பல சோதனைகள், தடைகள் இடையே குறுக்கிட்டு, குத்திட்டு நிற்கும். அவற்றைத் தாண்டுவதிலேயே நாட்டின் சுபீட்சம் தங்கியிருக்கிறது. அரசியல்வாதிகளுக்கு உண்மையான பரீட்சையும் அதுவே.

# மக்கள் தொண்டர்படை - இலங்கைப் பொலீஸ்
# இணைந்து செயற்பட ஏற்பாடு
## வவுனியாவில் நடந்த மாநாட்டில் முடிவு

வவுனியா, ஆக. 3
எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வவுனியாப் பகுதிகளில் குடிமக்கள் தொண்டர்படையினரும் இலங்கைப் பொலீஸாரும் இணைந்து செயற்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டம், ஒழுங்கு, வீதி ஒழுங்குகள் என்பவற்றைப் பராமரிப்பதிலும் நிர்வாகக் கடமைகளிலும் இவர்கள் ஈடுபடுவார்கள்.

இதனிடையில் எவரும் யாருக்கும் கப்பமாக நிதிவழங்குவது சட்டவிரோத நடவடிக்கையாக அறிவிக்கப்பட்டுள்ளது. கப்பம் கொடுப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று காலை இந்திய அமைதிப்படையின் உயரதிகாரிகளது அலுவலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட மாநாடு ஒன்றிலேயே இவ்வாறு முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் அமைதிப் படையின் உயரதிகாரிகள், இலங்கை இராணுவ வவுனியா இணைப்பதிகாரி, பிரிகேடியர் அபயரட்ன, பொலீஸ் அத்தியட்சகர் திரு. எஸ். நவரட்ணராஜா ஈ. பி ஆர். எல். எவ். வவுனியாப் பொறுப்பாளர் திரு. வெற்றி, அரசியல் இணைப்பாளர் திரு. ப. பராபரன், ஈ. என். டி எல். எவ் சார்பில் மாகாண சபை உறுப்பினர் திரு. ஐ. யசோதரன், சாந்தன் ரெலோ சார்பில் வவுனியா பொறுப்பாளர் ஞானி, நித்தி ஆகியோர் கலந்து கொண்டார்கள். (த 164)

## எயர்லங்கா புதிய தலைவர்

கொழும்பு, ஆகஸ்ட் 3
எயர்லங்காவின் புதிய தலைவராக திரு. டன்ஸ்ரன் ஜெயவர்த்தனா நியமிக்கப்பட்டார்.

நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய லொத்தர் சபை ஆகியவற்றின் தலைவர் பதவியை இவர் வகித்து வந்தார்.

எயர்லங்காவின் தலைவராக இருந்த திரு. பிராட்மன் வீரக்கூன் தற்போது ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஒ-எ)

## ஷெல் வீச்சில் முதியவர் காயம்

கோப்பாய் ஆக 3
கோப்பாய், இராஜவீதிப் பக்கமாக இருந்து கடந்த திங்கள் இரவு நான்கு ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

சனநெருக்கமான பகுதிகளில் அவை விழுந்து வெடித்தன. நல்லதம்பி (வயது 65) என்னும்முதியவர் காயமடைந்தார் வீட்டில் ஒரு பகுதியும் சேதமுற்றது.

இப்பகுதிமக்கள் அன்றிரவை பீதியுடன் கழித்தனர். (ஒ-72)

## ஏ.எஸ்.பி கார்மீது தாக்கு; சாரதிபலி

பத்தேகமவில் கடந்த ஞாயிறு உதவிப் பொலீஸ் அதிபர்போல் குருசிங்கசென்றகார் மீது இனந்தெரியாதவர்கள் மறைந்து இருந்து தாக்குதல் நடத்தினர்.

காரின் சாரதி விமலதாஸ அதில் உயிரிழந்தார். உதவிப் பொலீஸ் அதிபர் உயிர்தப்பி விட்டார். (ஒ-எ)

## பாஷையூர் சந்தை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பாஷையூர் சந்தை பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. (இ)

## வாழ்க்கை செலவு

கொழும்பு, ஆகஸ்ட் 3
ஜூலை மாத வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 824.5 ஆக இருந்ததாக புள்ளி விபரத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

கொழும்பு நகர பாவனையாளர்களது விலைப் பட்டியலைக் கொண்டு இது தயாரிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## வீதிகள் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஆக 3
எதிர்வரும் ஆறும் திகதி ஆரம்பமாகும் நலலூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு யாழ் மாநகராட்சி மன்றத்தினர் போக்குவரத்துப் பாதுகாப்பு ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் இதற்காணும் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி அதிகாலை 12. 1 மணியிலிருந்து 31 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை மூடப்பட்டிருக்கும்.

பருத்தித்துறை வீதி, கோயில்வீதி, செட்டித்தெரு.

## மேன் முறையீடு

சென்னை, ஆக 3
சென்னை மீனம்பாக்கம் விமான நிலைய வெடிகுண்டு வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு ஆயுள்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 5 தமிழர்களும் தீர்ப்பை ஆட்சேபித்து மேல்முறையீடு செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளனர். (இ)

# மாவைக் கந்தன் உற்சவத்திலும்----

காங்கேசன்துறை, ஆக. 3
மாவைக் கந்தன் உற்சவத்திலும் பல அடியார்கள் தமது தங்க நகைகளைப் பறிகொடுத்தனர்.

நெரிசலில் 3 சங்கிலிகள், ஒரு தாலிக்கொடி, குழந்தையின் காப்பு ஒன்று உட்பட மற்றும் கைப்பைகள் சிலவும் திருட்டுப் போய் உள்ளன.

கீரிமலையில் ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்தில் கலந்து கொண்ட மூதாட்டி ஒருவரின் தங்கச் சங்கிலியும் திருட்டுப் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் திருட்டுக் குறித்து வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இரு முறைப்பாடுகள் மட்டும் செய்யப்பட்டுள்ளன.

இணுவிலைச் சேர்ந்த கற்பகம் கந்தையா, செந்தாவத்தையைச் சேர்ந்த ஆறுமுகம் அன்னப்பிள்ளை ஆகியோர் தமது சங்கிலிகள் திருடப்பட்டது குறித்து முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

திருட்டுக்களை அடுத்து தொண்டர்கள் உடனடி நடவடிக்கை எடுத்தனர். சந்தேகத்துக்கிடமான பலரைப் பிடித்துத் தடுத்து வைத்தனர். அதன் பின்னர் திருட்டுகள் இடம் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் மற்றும் பல இடங்களில் நடந்த உற்சவங்களிலும் பலர் தங்க நகைகளை இழந்தனர் என்பது தெரிந்ததே. (இ-68)

## 190 பேர் பலி! 600 பேர் கைது

கொழும்பு, ஆக 3
கடந்த வெள்ளிக்கிழமை ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டதில் இருந்து சுமார் 190 பேர் உயிரிழந்தனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பாதுகாப்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் 600 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. (ஒ-எ)

# மக்கள் மயப்படுத்தலுக்கு இனி முன்னுரிமை - ஜனாதிபதி

கொழும்பு, ஆக. 3
அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டத்தில் இனி மக்கள் மயப்படுத்தலுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் பொன் விழாவை முன்னிட்டு பிரிஸ்டல் வீதியில் உள்ள அதன் முதலாவது நகர அலுவலகம் புதுப்பிக்கப்பட்டு, நவீனமயப் படுத்தப்பட்டு ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

அந்தவைபவத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்

அங்கு பேசுகையில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

ஆரம்பத்தில் வங்கியியல் துறை பற்றி ஆராய்ந்த கமிஷனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகள் சரிவர அமுல் செய்யப்படவில்லை. அதனால் எமது பொருளாதாரத்தில் பல பள்ளங்கள் உண்டாகின. கடன்வசதி போன்ற நலன்களை ஒரு சில வசதி படைத்தோர் மட்டுமே பெறக்கூடியதாக இருந்தது.

பொருளாதார அதிகார உடைமையை மாற்ற முடியாது போனது பெரும் தோல்வியாகும்.

இன்று, ஜனநாயகப் பொருளாதார, அரசியல் துறைகளின் அத்திவாரங்களுக்கே சமூக இயக்கங்கள் பயமுறுத்தல் விடும் இக்கட்டான நெருக்கடியான காலம் வந்துள்ளது.

எமது பொருளாதாரம் பெரிதும் வீழ்ச்சி கண்டுள்ளது. (அ)

# கல்வி இழப்புக்கள் எதுவரை தொடரும்?
## கைஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 3
கடந்த பல வாரங்களாக யாழ் குடாநாட்டின் ஒரு சில பகுதிகளில் நிகழ்ந்து வரும் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் பகிஷ்கரிப்பு நடவடிக்கை தொடர்ந்து கொண்டு இருக்கும் சூழ்நிலையில் நாம் இதுபற்றிய எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இப்படி மாணவர் இளைஞர் பொதுமன்றம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மைக் காலங்களில் எமது சமூகத்தின் மத்தியில் இடம் பெற்றுவரும் குழு மோதல்களும் இராணுவ நடவடிக்கைகளும் பெரும் இழப்புக்களை ஏற்படுத்திவருவது தெரிந்ததே. இதன் ஒரு அம்சமாகவே மாணவர்களும் அர்த்தமற்ற தாக்குதல்களுக்கு இலக்காகிவருகின்றனர். மிக அண்மையில் பல மாணவர்கள் இதற்கு பலியானதையும் தொடர்ந்து பலியாவதையும் சம்பந்தப்பட்டவர்கள் எந்த வகையிலும் முற்போக்கானது என நியாயப்படுத்தமுடியாது.

எனினும் இந்த இழப்புக்களுக்கு எதிராக அர்த்தமுள்ள நியாயமான நடவடிக்கைகள் எடுப்பதைவிடுத்து பாடசாலைகளையும் தனியார் கல்வி நிறுவனங்களையும் காலவரையறையின்றிப் பகிஷ்கரிப்பது இந்தத் தலைமுறையினது கல்வியை நாசமாக்குவதாக முடியும். ஏற்கனவே நாட்டின் பல பகுதிகளிலும் ஸ்தம்பிதமடைந்த நிலையிலும் அங்கு ஏதோ ஒருவகையில் கல்விசார்ந்த செயற்பாடுகள் தொடர்ந்தும் பல இன்னல்களுக்கும் மத்தியில் நடைபெற்றே வந்துள்ளன.

இன்று எமது சமூகத்தில் நிகழும் துரதிஷ்டமிக்க போரில் மாணவர்களையும் இணைத்து அரசியல் இராணுவ பகடைக்காய்களாக ஆக்க முனைவது எந்தவகையிலும் நன்மை பயக்காது.

மாறாக இவ்வாறான-செயற்பாடுகள் இன்றைய நிகழ்காலத்தைப்போலவே நாளைய எதிர்காலத்தையும் சிதைப்பதற்கே உதவும்.

ஆகவே மாணவர் போராட்டங்கள் வெறுமனே மாணவர் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மட்டும்அல்லாது இயக்க மோதல்கள் அற்ற நிலையை உருவாக்கவும் உதவவேண்டும். இதற்கு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சகல பகுதியினரையும் ஒருங்கிணைத்த செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியம்.

ஆகவே மாணவர்கள் மேற்படி நிலையான இலக்கை அடைவதற்காக வடக்கு கிழக்கின் சகல மாணவர்களின் பிரச்சினைகளுக்கும் தகுந்த தான, நியாயமான, பக்கசார்பற்ற, உறுதியான, பலமான போராட்ட வழிவகைகள் பற்றியே சிந்திக்கவேண்டும். இவ்வாறு மாணவரால் மேற்கொள்ளப்படும் சகல அர்த்தமுள்ள செயற்பாடுகளுக்கும் மாணவர் இளைஞர் பொதுமன்றம் தனது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கி உறுதுணையாக நிற்கும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில் சேவை ரத்து

ஊரடங்குச் சட்டம் காரணமாக இரவு நேர ரயில் சேவைகள் அனைத்தும் கால வரையறையின்றி இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் செவ்வாயன்று தெரிவித்தது. (ஒ-எ)

## திரிசாரணர் சேவை

ஆரம்பமாக இருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தில் நலலூர் திரிசாரணர் குழு சேவை செய்ய உள்ளது.

திரிசாரணர் குழு அங்கத்தவர்களும் புதிதாக இக்குழுவில் சேரவிருப்புவோரும் தங்கள் பெயர்களை உபசெயலாளரிடம் (163 நாவலர் வீதி) பதிவுசெய்யும்படி திரிசாரணர் குழுத் தலைவர் செ. தேவரஞ்சன் கேட்டுள்ளார். (த)

# தண்ணீரூற்றில் நடந்த 4 மணித்தியால மோதல்

மாங்குளம், ஆக 3
தண்ணீரூற்றில், ஆலடிச் சந்தியில் கடந்தவியாழக்கிழமை 4 மணித்தியாலமாக மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மோதலின் போது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் கடும் ஷெல் வீச்சுக்களும் நடந்தன.

படையினர் தரப்பில் 7 பேரும் அடுத்த தரப்பில் இருவரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

ஷெல் தாக்குதலில் வட்டாரக் கல்வி அதிகாரியான ஏ. கே. மகாலிங்கத்தின் வீடும் ஊற்றங்கரைப் பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாகவுள்ள கே. ஜெகதீஸ்வரன் என்பவரது வீடும் சேதமாகின.

இந்தச் சம்பவம் நடந்த அதே வேளையில் ஒணுக்காயில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பஸ் சேதமானதாயினும் அதிஷ்ட வசமாக எவரும் பாதிக்கப்படவில்லை. [ஒ-94]

## அம்புலன்ஸ் இல்லை

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஒரே ஒரு கிராமிய வைத்தியசாலையான மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் 'அம்புலன்ஸ்' வண்டி வசதி கிடையாது. இதனால் கடுமையான நோயாளிகள் உயிராபத்தை எதிர்நோக்க வேண்டிய ஆபத்தான நிலை நீடித்து வருகிறது.

போக்குவரத்துக் கஷ்டம் நிறைந்த இப்பகுதியில் அமைந்துள்ள இவ்வைத்திய சாலைக்கு 'அம்புலன்ஸ்' வண்டி மிக அவசியமானது.

அண்மையில் இவ்வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உடுத்துறையைச் சேர்ந்த நோயாளி ஒருவரை வைத்தியசாலை டாக்டர் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்படி கூறிய போதிலும் வாகனப்போக்குவரத்து வசதியில்லாமையினால் உறவினர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்ற சில மணி நேரத்தில் அவர் மரணமானார்.

இதே போன்று இவ்வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் செல்லும் குழந்தைகள் உட்பட கடுமையான நோயாளிகள் வாகன வசதி இல்லாமையினால் உயிராபத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை இருக்கிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைக் கவனித்து ஆவன செய்வார்களா?

அ. கயிலைநாதன்
தாளையடி.

## பாரபட்சம்

கோப்பாய்ப் பகுதியில் சமூகசேவை திணைக்களத்தினால் வழங்கப்படும் உபகாரச் சம்பளத்தை வெளிநாடுகளில் பிள்ளைகள் வேலை பார்க்கும் பெற்றோர் பெறுகின்றனர்.

அதேவேளை ஒருவித வருமானமும் இல்லாதவர்கள் உபகாரப் பணத்திற்கு விண்ணப்பித்தும் அவர்களுக்கு அது கிடைக்கவில்லை.

இந்தப் பாரபட்சம் என்று தீரும்?

க. விக்னு
கோப்பாய்.

## கலட்டி அம்பாள்

யாழ்ப்பாணம், ஆக. 3
யாழ்- வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி அம்பாள் ஆலய இரதோற்சவம் நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

காலை 8.00 மணிக்கு அம்பாள் சித்திரத்தேரில் ஆரோகணித்து வீதிவலம் வந்து அடியார்களுக்குக் காட்சி தருவார்.

காலை 9 30 மணிக்கு சுற்றுலா முடிவுற்று 10 மணி அளவில் அம்பாள் பச்சைப் பட்டாடை உடுத்தி ஆலயத்தைச் சென்றடைந்தவுடன் நவசக்தி அர்ச்சனையும் நடைபெறும். (த-10)

## மாவையில் பிராயச்சித்தம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ பிராயச்சித்த அபிஷேகமும், பூந்தண்டிகை உற்சவமும் இன்று நடைபெறவுள்ளன

காலை எட்டுமணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், 10.45 மணிக்கு ஆசிர்வாதம், திருவருட்பிரசாதம் வழங்கலும், மாலை மூன்று மணிக்கு பூந்தண்டிகைப் பவனியும் இடம் பெறும். (இ-68)

## மண்டலாபிஷேக பூர்த்திவிழா

சுழிபுரம், ஆக. 3
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் தேவஸ்தான கும்பாபிஷேக மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா வெள்ளிக்கிழமை காலை முதல் நடைபெறவுள்ளது. (இ-28)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் அறிமுகம்
**Chilton Trip Switch**

மின் பொறியியலில் புகழ் மிக்க
Ottermill Chilton Ltd.
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

★ சுந்தர்சன் ★
சந்தை முன், மானிப்பாய்.

**OTTERMILL CHILTON LTD.**
HUNGERFORD, BIRKSHIRE,
ENGLAND.

[சி-3119]



ஸ்டைரோபோம் உற்பத்திகளை
(றிஜிபோம்)
நாம் தயாரிக்கின்றோம்

- மீன் பிடிக்க உதவும்
மிதப்புக் கட்டைகள், ஷீட்டுக்கள்,
மீன்கொண்டு செல்லும் பெட்டிகள்,
ஐஸ்கிறீம் கொள்கலன்கள், பைப்,
இன்சுலேஷன் மற்றும் பொதிகட்டும் பொருட்கள்
மற்றும்
பொலிபிளெக்ஸ் உற்பத்திகளும்
(ஆர்பிபோம்)
குஷன்கள், மெத்தைகள், ஷீட்டுக்கள்,
ஸ்பொன்ஜ்கள் மற்றும் மெத்தை
போன்றவற்றைத் தயாரிக்க உதவும்
பொருட்களுக்கும்
- கவர்ச்சிகரமான கழிவுகள் வழங்கப்படும்.

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு
முகவர்கள் தேவை.

தொடர்பு கொள்க:
லங்கா பொலிமர்ஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்.,
49, கெய்சர் வீதி. கொழும்பு-11.
246, நீர்கொழும்பு வீதி. வத்தளை.
29/1, போதிராஜ மாவத்தை, கொழும்பு - 11.
(பீப்பிள்ஸ் பார்க் கம்பிளெக்ஸ்)
தொலைபேசி: 421954, 530455.



புரோட்டீன் நிறைந்த
புரோட்டினெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர
புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும்
அவசியமான விற்றமின்களும் தாதுப்-
பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# விளையாட்டு அரங்கு

தென்கொரியா சோலில்

## ஐந்தாவது ஆசியக் கிண்ண கரபந்தாட்டப் போட்டிகள்

சோல், ஆ 3
5 ஆவது ஆசியக் கிண்ணத்துக்கான கரபந்தாட்டப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி தென்கொரியத் தலைநகரான சோலில் ஆரம்பமாகின்றன.
12 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை அணி இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி புறப்பட்டுச் செல்லும்.
இப்போட்டியில் பங்கு பற்றும் 23 நாடுகளும் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெறும் அணிகள் கால் இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெறும்.
இலங்கை அணி இடம்பெற்றுள்ள குழுவில் இந்தியா, குவைத், ஹொங் கொங் ஆகிய நாடுகளும் இடம்பெறுகின்றன. (த-6)

தென்னாபிரிக்க வீராங்கனையுடன் இணைந்தாடிய

## சிம்பாப்வே டென்னிஸ் வீராங்கனைக்கு இரண்டு வருட தடை உத்தரவு

இங்கிலாந்தில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் தென்னாபிரிக்க வீராங்கனையுடன் இணைந்து ஆடிய சிம்பாப்வே வீராங்கனைக்கு அந்நாட்டு அரசு இரண்டு வருட தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
பெண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் தென்னாபிரிக்க வீராங்கனையான ஜெனேலோக்கருடன் இணைந்து ஆடியதற்காகவே சிம்பாப்வேயின் சிறந்த வீராங்கனையான 17 வயது நிரம்பிய வெஸ்லி பார்பர் மீது இத்தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.
உள்நாட்டு, வெளிநாட்டு டென்னிஸ் போட்டிகளில் 2 வருடங்களிற்கு விளையாட முடியாதவாறு தடை விதிக்கப்பட்டுள்ள இவர் விம்பிள்டன் போட்டியில் இத்தாலிய வீரர்களிடம் தோற்றுப் போனார். (த-6)

## மருத்துவபீட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஆக 3
யாழ் மருத்துவ பீட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் மருத்துவபீடத்தில் நடைபெறும் என்று மருத்துவ மாணவர் ஒன்றியம் அறிவித்து உள்ளது. (ஒ)

## மிதி வெடியில் சிக்கியவர் காலை இழந்தார்

மிதிவெடியில் சிக்கிய ஒருவர் தமது இடதுகாலை இழந்தார்.
முல்லைத்தீவு அளம்பிலைச் சேர்ந்த துரைராசா இராசரத்தினம் [வயது 31] என்பவரே காலை இழந்தவராவார்.
அவர் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-10)

## நினைவுதினம்

அமரர் அ. வைத்திலிங்கம் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு தினமும் உருவப்படத் திறப்பு விழாவும் யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள பொன்குமாரசாமி நூலகத்தில் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு திரு. வி. அற்புதரத்தினம் தலைமையில் நடைபெறும். (க)

## மரணமானார்

மாங்குளம் வர்த்தக முதல்வரும், மாவடி சித்திவிநாயகர் ஆலய தலைவருமான திரு. வி. கனகசபை கொழும்பிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த வேளையில் பஸ்ஸில் மாரடைப்பால் மரணமானார்.
அவருக்கு 26 ஆம் திகதி மாங்குளம் மக்கள் வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டி கறுப்பு வெள்ளைக் கொடிகளும் கட்டி அஞ்சலி தெரிவித்தனர். (சு-94)


- விலங்கியல் -

விற்பனையாகின்றது:
மாதிரி வினாக்கள்
(Model Questions)
மாதிரி வினாத்தாள் - 89
(Model Questions Paper - 89)
மீன் வளர்ப்பு
(Fish Culture)
ஆசிரியர்:- Mr. R. ஈஸ்வரதாசன் B.Sc. (Cey)
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

PERSONAL CLASSES
B. M. C. FRONT LANE.
JAFFNA.

[சி-3131]



A/L 89, 90, 91
Weekend Classes
சனிக்கிழமை முதல்
(05- 08- 89)
வழமையான நேர
அட்டவணையில்
புதிய பிரிவுகளும்
ஆரம்பம்

New Master Institute
B M C Lane,
241, Navalar Road,
Jaffna.

(C/3144)



வகுப்புகள் யாவும் 03-08-89 (வியாழக்கிழமை)
முதல் வழமையான
நேர அட்டவணைப்படி ஆரம்பமாகின்றன.

புதிய வகுப்பு ஆரம்பம்

- Diploma in Computer Programming and Data Processing in Basic Language

ஆரம்பம், 05-08-89
(சனி, ஞாயிறு வகுப்புகள் 1.00 p.m.)
சேரும் பொழுது செலுத்த வேண்டியது
ரூபா 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M. (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

UNIKCO COMPUTER CENTRE
இல. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற்கந்தோர் அருகாமை)

[சி-3127]



A/L PHYSICS
ஆசிரியர்.
R. சத்தியசீலன்
கந்தர்மடம்
[யாழ்]
சகல வகுப்புக்களும்
89, 90 & 91
05. 08. 1989
சனி முதல்
வழமையான நேர
அட்டவணைப்படி
நடைபெறும்.

(சி/3132)


Jaffna College
Institute of Technology
Vaddukoddai

சகல மாணவர்களுக்கும்
முக்கிய அறிவித்தல்

மேசன், தச்சு வேலை பயிற்சிகள் உட்பட சகல பயிற்சி நெறிகளுக்குமான வகுப்புகள் ஆகஸ்ட் மாதம் 7 ஆந் திகதி மீண்டும் ஆரம்பமாகின்றன.
தவிர்க்க முடியாத காரணங்களால் பின் போடப்பட்ட சகல பரீட்சைகளும் ஆகஸ்ட் மாதம் 9 ஆந் திகதி தொடக்கம் மீண்டும் நடைபெறும்.
மாணவர்கள் அனைவரும் கல்லூரிக்கு சமுகம் தந்து தங்கள் பயிற்சிகளைத் தொடருமாறு வேண்டப்படுகின்றனர்.

- பணிப்பாளர் -

[சி-3135]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவஞானம்மா இராசரத்தினம்**

தோற்றம்: 01 - 01 — 1927
மறைவு: 15 — 07 — 1988

திதி: பூர்வ பக்க துதியை 03 - 08 - 1989

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
எங்கள் இல்லத்தில் தெய்வமாய் விளங்கி
எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டியாய் நின்று
ஆட்கொண்ட அன்பு அம்மாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாளும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:
— குடும்பத்தினர்.

'சந்திர வாசா'
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

[11670]

உ
விஸ்வப் பிரம்மனே நம

## 2ஆம் வருட நினைவஞ்சலி



அமரர்
**உயர்திரு பொ. நா. கனகசபை**
[ஓய்வுபெற்ற நில அளவை உப அதிகாரி]

மலர்வு: 1926 - 06 - 14
உதிர்வு: 1987 - 07 - 27

திதி: 1989. 08. 03

அப்பா! என அழைக்க எமக்கிங்கு யாருமில்லை
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறவில்லை நம் சோகம்
ஆறாய் நீர் சொரிந்து நிற்கின்றோம் - எம்
ஆதவனின் பிரிவினால்
பண்புடன் வளர்த்தீரே பாசமுடன் காத்தீரே!
அன்று தூரதேசம் நின்றாலும் மடல் வடிவில் உங்கள்
சுகம் கூறி நிற்பீர்களே — ஆனால்
இன்று உங்கள் சுகம் கூற மறந்ததென்ன?
உங்கள் சிரித்த முகமும், சிங்காரத் தோற்றமும்
கலகலப்பான பேச்சும் எங்களை நித்தமும் உங்களை
காண விழைகின்றனவே!
நாங்கள் உங்களைக் காண்பதுதான் என்றோ?

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை நித்தமும் வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**

மாகியம்பதி சந்தி,
சண்டிலிப்பாய்.

(11669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PATRICIAN INSTITUTES

மாணவ மாணவியருக்கான

**அறிவித்தல்**

எமது நிறுவனத்தில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கம்பியூட்டர் பயிற்சிநெறி வகுப்புகள் எதிர்வரும் 05-08-89 சனிக்கிழமையும், ஏனைய பயிற்சிநெறி வகுப்புகள் 07 - 08 - 89 திங்கட்கிழமையும் மீண்டும் ஆரம்பமாகின்றன என்பதை எமது மாணவமாணவியருக்கு அறியத்தருகின்றோம்.

அத்துடன் கம்பியூட்டர் பயிற்சிகள் (Practicals) மின்சாரத் தடை இருந்தாலும் ஜெனரேட்டர் உதவியுடன் நடைபெறுகின்றன.

கம்பியூட்டர் பயிற்சி முடித்த மாணவ மாணவியர்களுக்கு மிகவிரைவில் பரீட்சை நடைபெற இருப்பதால் அவர்களுக்குரிய மேலதிக அச்சடித்த பாடக் குறிப்புகள் நிறுவனத்தில் நேரில்வந்து பெற்றுக்கொள்ளவும்.

-Registrar

Patrician Institute of Higher Studies,
59, St. Patrick's Road.
Jaffna.　(C/3136)


பணயக் கைதி கொலை விவகாரம்:

# கெரில்லா மீது ராணுவநடவடிக்கை?

# அமெ. கப்பல்கள் லெபனுன் விரைவு!

வாஷிங்டன், ஆக. 2

இரண்டாவது அமெரிக்கப் பணயக் கைதியைக் கொல்வதை அரபு தீவிரவாதக்குழு ஒன்று வியாழக்கிழமை (நாளை) வரை ஒத்திவைத்துள்ளது.

அந்த அமெரிக்கரின் சிறிய மனைவி கடைசி நேரத்தில் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே கொல்வதற்கான காலக்கெடு நீடிக்கப்பட்டிருக்கிறது.

இதனிடையில்— லெபனுனில் உள்ள பணயக் கைதிகள் அனைவரையும் உடனே விடுவிக்கும்படி சம்பந்தப்பட்டோருக்கு அமெரிக்கா நேற்று வேண்டுகோள் விடுத்தது.

அதிபர் புஷ்ஷின் இந்த வேண்டுகோள் அரபு தீவிரவாதிகளைக் கடத்தி கைதிகளாக வைத்திருக்கும் இஸ்ரவேல் அரசுக்கும் சேர்த்துத்தான் என்று வாஷிங்டன் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிபர் புஷ் இன்று தனது உளவுப்பிரிவுத் தலைவர்களுடன் தீவிர ஆலோசனை நடத்தினுர்.

மத்திய கிழக்கின் தற்போதைய நிலைமை குறித்து உளவுப்பிரிவுத் தலைவர்கள் அதிபர் புஷ்ஷுக்குத் தெரியப்படுத்தினுர்கள்.

**இராணுவ நடவடிக்கை**

பாதுகாப்பு மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுடன் 24 மணித்தியாலயங்களில் இரண்டாவது தடவையாக அதிபர் புஷ் பணயக்கைதி கொலை பற்றிக் கலந்துரையாடினுர்

கொலைக்குப் பொறுப்பான அரபு தீவிரவாதிகள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும் சாத்தியக்கூறு பற்றியும் அமெரிக்க அரசு ஆராய்ந்து வருகிறது என்று பி.பி.சி. அறிவித்தது.

ஒரு விமானந்தாங்கிக் கப்பலையும் சில போர்க்கப்பல்களையும் அமெரிக்கா லெபனுனுக்கு அவசரமாக அனுப்பி வைத்துள்ளது

பணயக்கைதி கொலை செய்யப்படுவதற்கு முன்னரே கப்பல்கள் அனுப்பிவைக்கப்பட்டன என்று பென்டகன் தெரிவித்தது.

லெபனுனில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டார் அனைவரையும் அதிரடித் தாக்குதல் மூலம் மீட்க அமெரிக்கா எண்ணியிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

**ஈரான் கவலை**

அமெரிக்கா கேர்னல் ஹிக்கின்ஸை கொலை செய்த சம்பவம் பற்றி ஈரானின் புதிய ஜனுதிபதி ரஸ்வன் ஜானி கவலை தெரிவித்தார்.

தன்னைச் சந்தித்த சோவியத் தூதரிடம் அவர் இதனை வெளியிட்டார்.

கொலையைச் செய்த ஈரான் ஆதரவு பெற்ற லெபனுன் கெரில்லாக்கள் தனது கட்டுப்பாட்டில் இல்லை என்றும் ஜனுதிபதி ரஸ்வன்ஜானி தெரிவித்தார்.

கொலையை சோவியத் யூனியனும் வன்மையாகக் கண்டித்துள்ளது. (எ)

உண்மை நிலை கண்டறிய

## ஐ. நா. சிறப்புப் பிரதிநிதி லெபனுன் அனுப்பப்பட்டார்

ஐநா, ஆக. 2

விசேட பிரதிநிதி ஒருவரை ஐ நா பொதுச்செயலாளர் பெரஸ் டி குயிலர் லெபனுனுக்கு அனுப்பியிருக்கிருர்.

அரபு கெரில்லாக்களால் தூக்கிலிடப்பட்டதாகக் கூறப்படுபவர் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த அமெரிக்க கேர்னல் ஹிக்கின்ஸ் தாஞ என்பதை உறுதிப்படுத்தவும் அது உண்மையானுல் சடலத்தைக்கொண்டுவரவும்சிறப்புப் பிரதிநிதிக்கு பொதுச் செயலாளர் குயிலர் அதிகாரம் அளித்திருக்கிருர். (எ)

## ஆப்கன் பிரச்சினைக்குத் தீர்வு

### அமெ. -ரஷ்ய பேச்சில் இழுபறி

ஸ்டொக்ஹோம், ஆக. 2

ஆப்கன் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றி அமெரிக்க, சோவியத் அதிகாரிகளுக்கு இடையே சுவீடன் தலைநகரில் இரண்டு தினங்களாக நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்கள் முற்ருக விலக்கப்பட்ட பின்னர், இரு நாடுகளுக்கும் இடையே இப்பிரச்சினை குறித்து இடம் பெற்ற முதலாவது உயர்மட்ட மாநாடு இதுவாகும்.

டாக்டர் நஜிபுல்லா தலைமையிலான காபூல் அரசுக்கு சோவியத் யூனியன் தொடர்ந்து ஆயுதங்களை வழங்கிவருவதாக அமெரிக்கப் பிரதிநிதியும்—

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டியங்கும் முஜாஹுதின் கெரில்லாக்களுக்கு அமெரிக்கா ஆயுதங்களைத் தொடர்ந்து வழங்கி வருவதாவும்— பேச்சுக்களின்போது இருதரப்பினரும் குற்றஞ்சுமத்தினர்.

சகல கெரில்லாக்களின் பிரதிநிதிகளும் நாஜிப் அரசுப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் இடைக்கால அரசு அமைக்கப்படவேண்டும் என்பதை சோவியத் அரசு வலியுறுத்தியது:

யார் ஆள வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை ஆப்கன் மக்களிடமே விடவேண்டும் என்று அமெரிக்கப் பிரதிநிதி பேச்சுக்களின்போது வலியுறுத்திஞர்: (எ)

## ஆபிரிக்க டெலிவிஷனில் தமிழ்ப்படம்

டர்பன், ஆக. 2

தென் ஆபிரிக்காவில் உள்ள தனியார் டெலிவிஷன் நிலையம் ஒன்று தமிழர்களுக்காகத் தமிழ்ப்படம் ஒளிபரப்புகிறது.

தென் ஆபிரிக்கத் தமிழருக்கு என்று தனியாக நிகழ்ச்சிகளை இந்த நிலையம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒளிபரப்பி வருகிறது: (எ)

சோவியத் யூனியன்

## அஸர்பைஜானில் மோதல்; இராணுவம் தாக்கப்பட்டது!

மாஸ்கோ, ஆக: 2

சோவியத் யூனியனில் நாகொர்ணு - கரபா பகுதி தொடர்பான மோதல் மீண்டும் ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அஸர்பைஜான் மாநிலத்துடன் உள்ள இப்பகுதியை ஆர்மேனியாவுடன் சேர்க்க வேண்டும் என்று ஆர்மேனியா மக்கள் ஓராண்டு காலத்துக்கு முன்பிருந்தே கிளர்ச்சிநடத்தி வந்தனர்.

இதில் 100 பேர் வரை மரணமடைந்தனர்.

அதைத் தொடர்ந்து சோவியத் மத்திய அரசு பிரச்சினையில் தலையிட்டு நாகொர்ணு-கரபா பிரதேசத்தைத் தனது நேரடிக்கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.

நேற்று முன்தினம் இப்பிரதேசத்தில் மீண்டும் பதற்ற நிலைஏற்பட்டது. அதைத் தணிக்க மத்திய அரசு துருப்புக்களை அனுப்பியது.

அஸர்பைஜான் ஊடாக அத்துருப்புக்கள் திரும்பிக்கொண்டிருந்தபோது அவர்கள் சென்ற வாகனங்களை அஸர்பைஜானியர்கள் வழிமறித்துத் தாக்கினர்.

அப்போது 3 இராணுவத்தினர் உட்பட 23 பேர் காயமடைந்தனர். (எ)


# NEW BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சித்ராலயா ஸ்ருடியோ முன்பாக]

**A/L 90 - 91**
கலை, வர்த்தகம்
வழமையான நேர அட்டவணையின் படி வகுப்புக்கள் நடைபெறும்.
05 - 08 - 1989 சனி

**A/L 91**
புதிய பிரிவு
ஆரம்பம்:
05 - 08 - 1989 சனி 10.00 a.m

**G. A. Q - B. A**
வகுப்புகள்
வழமையான நேர அட்டவணையின் படி நடைபெறும்
[சி-3139]



# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பாணம்.

**B. A, G. A. Q,**
**A/L 89 - 90**
வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

**A/L 91 புதிய பிரிவு**
ஆரம்பம்: 05 08 - 1989
புதிய ஆங்கில வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

· நிர்வாகி.
(சி/3146)



# A/L விஞ்ஞான

மாணவர்களின் கவனத்திற்கு

மீண்டும் சகல வகுப்புக்களும் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன. மேலும் விபரங்களிற்கு நேரில்

குறிப்பு: 91 Batch க்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாக இருப்பதால் பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்.

3ஆம், குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

மணல் தரை லேன்,
கந்தர்மடம்.

[சி-2938]



**89 Day Class**
நாளை முதல்
(04 - 08 - 89)
வழமையான நேர அட்டவணையில்

**New Master Institute**
B.M.C. Lane,
Jaffna.
[சி-3143]



# BECON

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 90 - 91**
கலை, வர்த்தகம்
வழமையான வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகின்றன.
05 08 - 1989 சனி
வழமையான நேர அட்டவணையின்படி வகுப்புக்கள் நடைபெறும்.

**A/L 91**
புதிய பிரிவு
ஆரம்பம்: 05. 08. 1989
சனி 9.00 மணி
(சி/3137)


சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

## அறிவித்தல்

இச்சங்கத்தில் இருக்கும் 3330 வெற்றுச்சாக்குகளை விற்பனைசெய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன: வைப்புப்பணமாக ரூபா 300/-உம், கேள்விப்பத்திரம் ஒன்றுக்கு ரூபா 12/50 உம் செலுத்தி 7 - 8 - 89 தொடக்கம் விண்ணப்பப் படிவங்களைச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 11 - 8 - 89 பிற்பகல் 3 மணி வரை சமர்ப்பிக்கப்படலாம்:

சித்திபெறும் விண்ணப்பதாரர் உரியபணத்தை 15 - 8 - 89 பிற்பகல் 2 மணிக்கு முன் செலுத்தி வெற்றுச் சாக்குகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்;

பொதுமுகாமையாளர்.

சாவகச்சேரி:
31 - 7 - 1989.　(சி/3134)


# வெளிநாட்டுப் பயணம்

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் எமது
Manpower Recruiting
ஸ்தாபனத்திற்கு உதவி ஏஜெண்டுகள்
உடனே தேவை: தொடர்பு கொள்ளவும்:

S & S. ENTERPRISES
No. 8, Lakshmi Garden,
Maradhana Road, Borella,
COLOMBO - 8.
[11682]



Norway Scholarship Student
Visa 1990 August க்குப் பெற விருப்புவோர்
15 - 08 - 1989க்கு முன்னர் மேல் வரும்
விலாசத்தில் உடனே நேரில் வரவும்
✶ வயது 18 — 22 வரை

**Satheesan Travels & Tours**
Mallakam Junction,
K. K. S. Road,
Mallakam.
[1484]



**91 A/L**
புதியபிரிவு
(விஞ்ஞான பாடங்கள்)
ஆரம்பம்
05 - 08 - 1989
சனிக்கிழமை
காலை 9.30 மணி
(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

**New Master Institute**
B. M. C. Lane.
Jaffna.
[சி-3141]


● நினைவலைகள் ●



செல்வன்

**மகாலிங்கம் மகேஸ்வரன்**

(யாழ். மத்திய கல்லூரி வர்த்தக மாணவன்)

படைப்பு:
02 - 06 - 1969

அழிப்பு:
23 - 07 - 1989

படிக்கும் வயதினிலே துடிதுடித்து ஒரு சாவா!
பரீட்சை வேளையிலே பாதையில் தான் மரணமா!
விடிவுக்காய் ஏங்கியிருக்க
விண்ணகம் தான் விரைந்தாயோ!
துயருறும் எங்களையும் நினைத்தொருக்கால் வாராயோ

தாய், தந்தை,
தம்பி, தங்கை, நண்பர்கள்.

நீர்வேலி

[1431]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHILTON
CHILTON
CHILTON
CHILTON
CHILTON

# உதயன்

03 08 1989 வியாழக்கிழமை

மலிவுவிலையில் அறிமுகம்
**Chilton Trip Switch**
மின்பொறியியலில் புகழ்மிக்க
OTTERMILL CHILTON LTD
தொபனத்தாரின் தயாரிப்பு
சுந்தர் சன்
சந்தைமுன், மானிப்பாய்.

## காணியில் கிடந்த பொருள் வெடித்து மூவர் காயம்!

வடமராட்சி, ஆகஸ்ட் 3 தரிசாகக் கிடக்கும் காணி ஒன்றுக்குள் இருந்த பொருளை கண்ட ஒருவர் அதனை எடுத்து நசித்தார். அது வெடித்தது. வெடி விபத்தினால் அவரும் மற்றும் இரு சிறுவர் சிறுமியரும் காயமுற்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கரவெட்டியில் இச் சம்பவம் நடந்தது.

தர்மலிங்கம் சுபனிகாந்த் (வயது 29), தியாகராசா தில்லைநாதன் (வயது 12). கந்தப்பு தனுசுஜா (வயது 11) ஆகிய மூவருமே காயமடைந்தவர்கள் ஆவர். இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-160)

*Radiant Institute*

Punkankulam, Ariyalai.

**Spoken English**
**(3 Months Course)**
By Mr. BRITO
**ஆரம்பம்: 5- 8- 89 5 P. m (சனி)**

**O/L - 1989 Dec பிரிவு**
DAY CLASS
**ஆரம்பம்: 7- 8- 89 8. 30 A.m [திங்கள்]**

**A/L - 91 Batch**

| | |
|---|---|
| பொருளியல்: | M. லோகசிங்கம் |
| கணக்கியல்: | M. தனபாலசிங்கம் |
| வர்த்தகம்: | E. இரட்ணம் |
| அளவையியல் | S. S. மனோகரன் |
| தமிழ்: | S. மீரா |
| இந்துநாகரீகம்: | S. யோதீஸ்வரன் |

**ஆரம்பம்: 9- 8- 89 4 p. m [புதன்]**
(1427)

## பதவி வெற்றிடங்கள்

**ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலையில் பணிபுரிவதற்கு பின்வரும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-**

**(1) ஓட்டோ சாரதியும் காவலாளியும்**
**Auto Driver - Cum - Watcher**

சிறந்த சாரதி லைசென்சும் அனுபவமும் உடைய 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
அவசிய மேற்படின் சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களிலும் பணிபுரிய வேண்டும்.

**(2) இல்லப் பராமரிப்பாளர்**
**Care Taker**

இத்தொழிற்சாலையில் தங்கியிருந்து அதன் பயன் பெறுநர் பணியாளர் ஆகியோருக்கு தங்குமிடவசதி ஏற்பாடு செய்தலும் அவர்களுக்கு உணவு தயாரித்துப் பரிமாறலும் முக்கிய கடமையாகும். 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

* கல்வி அறிவும், அனுபவமும் தொண்டு மனப்பான்மையும், நேர்மையும் முன்னுரிமை பெறும்
* உணவு வசதியுடனான சம்பளம் நேரில் பேசி நிர்ணயிக்கப்படும்
* விண்ணப்பங்களை நேரிலோ: தபால் மூலமோ 1989-08 09 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டிய முகவரி.-

**ஜெய்ப்பூர்**
**செயற்கைக் கால் தொழிற்சாலை**
இல: 5, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்,
(சி/2940)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 892/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03 - 08 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மீளக் குடியமர்தல் நிவாரணம் மீண்டும் நாளை முதல்

யாழ்ப்பாணம், ஆக. 3 மீளக் குடியமர்தல் நிவாரணப்பணம் வழங்கும் வேலைகள் நாளை வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கைவங்கிப் பிரதான கிளைக் காரியாலயத்தில் நாளைக்காலை 8-00 மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணிவரை நிவாரணப் பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னர் பெயர் திகதி என்பன குறிப்பிடப்பட்டு அறிவிக்கப்பட்டபோதிலும் அந்தத் திகதிகளில் நிவாரணப் பணத்தைப் பெறத் தவறியவர்களுக்கே நாளை நிவாரணப்பணம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே நிவாரணப் பணத்தைப் பெறத் தவறிய சச்சமோட்டை, கொழும்புத்துறை, குருநகர் கிழக்கு, குருநகர் மேற்கு, இருபாலை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு மட்டுமே கொடுப்பனவுகள் நாளை வழங்கப்பட உள்ளன. (இ-9)

## அலி உதுமான் கொலை: ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டனம்

யாழ்ப்பாணம், ஆக. 3 வடக்கு. கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனாப். எம். எச். அலி உதுமான் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஈ. பி. ஆர், எல். எவ். அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது:

அறிக்கை விவரம் வருமாறு: முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தரும் வடக்கு— கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான ஜனாப் அலி உதுமான் அவர்களின் படுகொலை எமக்கு அதிர்ச்சியையும், மிகுந்த மனவேதனையையும் உண்டு பண்ணியுள்ளது.

இவர் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காக அயராது உழைத்தது மட்டுமன்றி, முஸ்லிம் தமிழ் இனக்கலவரங்கள் ஏற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்: இரு இனங்கள் மத்தியிலும் ஐக்கியத்தையும் பரஸ்பரம் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதில் முன்னின்று செயற்பட்டவர்:

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் செயற்பாட்டின் ஊடாகவும் வடக்கு - கிழக்கு மாகாண அரசின் அதிகாரப் பரவலாக்கல் மூலமும் அமைதி ஏற்படுவதையும். தமிழ் முஸ்லிம்மக்கள் ஐக்கியமாக வாழ்வதையும், விரும்பாதவர்களால் ஜனாப் அலி உதுமான் படுகொலை செய்யப்பட்டமையை ஈமமக்கள் விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்கான ஆயுதங்களும் பாதுகாவலர்களும் வழங்கப்படாமையைப் பல்வேறு மட்டங்களிலும் முதலமைச்சராலும், மாகாணசபை உறுப்பினர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும், எவ்வித பாதுகாப்புமற்ற நிலையில் அரசின் பாரபட்சமான போக்குக்கு ஜனாப் அலி உதுமான் அவர்கள் பலியாகி உள்ளார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டவிரும்புகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இளைஞர் பலி

யாழ்ப்பாணம், ஆக: 3 அரியாலை வாசி ஒருவர் நேற்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இறந்தவர் ஆர். சுந்தரராஜன் (வயது 21) என்பவர் ஆவார்.

நேற்று முன்தினம் மாலையில் கூட்டிச் செல்லப்பட்ட பிரஸ்தாப இளைஞர் காலையில் வீட்டில் சடலமாக ஒப்படைக்கப்பட்டாராம். (அ-9)

### சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், ஆக. 3 புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ஒருவர் அவரது வீட்டில் இருந்த சமயம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பூதப்பிள்ளை மகாலிங்கம் (வயது 35) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஒ-10)

### அக்கரைப்பற்றில் மேலும் இருவர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஆக. 3 அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

அவர்களின் சடலங்களும் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.ஐ.அலி உதுமானின் சடலத்துக்கு அருகில் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-எ)

### இரு சரக்கு ரயில்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஆக. 3 யாழ்ப்பாணத்துக்கு நேற்று இரு சரக்கு ரயில்கள் வந்து சேர்ந்தன.

எரிபொருள்களும், உணவுப் பொருட்களும் ஏற்றி வரப்பட்டதாக ரயில்வேப் பகுதியினர் தெரிவித்தனர். (ஒ-3)

### குளப்பிட்டியில்

யாழ்ப்பாணம், ஆக: 3 கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்குச் சமீபமாக நேற்றுக் காலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. (ஒ-9)

### 10 ஆயிரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவித்தன.

மின்சார சபையினர் தமது ஜெனரேட்டர்கள்மூலம் வழங்கும் மின்சாரம் தொழிலகங்களை இயக்கப் போதிய வலுக்குறைந்தவை என்றும், தொழிற்சாலைகளை இயக்க மின்சாரத்தைப் பாவிக்க வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்சாலைகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3)

### வல்வை...

இரத்தக் கறைகள், கிழிந்த துணிகள், பாத அணிகள் காணப்பட்டன.

வல்வைப் பொதுச் சந்தையில் பொருள்கள், மற்றும் பொதுமக்களின் உடைமைகள் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன.

பொதுமக்கள் வேவிற் பிள்ளையார் கோவில், நெடியகாட்டுப் பிள்ளையார் கோவில் ஆகியவற்றிலும், "பிளாட்" வீடுகளிலும் தஞ்சம் புகுந்தனர்.

நேற்று மாலை மூன்று மணிவரை இப் பகுதியில் தொடர்ந்து வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன.

இறந்த இருவரின் சடலங்கள் வல்லை முள்ளிச்சுடலைக்குக் கொண்டுவரப்பட்டு எரிக்கப்பட்டது.

இதே சமயம் உடுப்பிட்டி, பொலிகண்டி முதலிய இடங்களிலும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதனால் இப்பகுதிகளிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்தனர். (உ-160-70)

### சகல குழுக்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் - என்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

**பிரேமாவின் செய்தி**

இதே வேளை — ஜனாதிபதி பிரேமதாஸாவிடமிருந்து கிடைத்த செய்தி ஒன்றிற்குப் பின்னர் அமைச்சர் விஜேரத்தின பிரதமர் ராஜீவ் காந்தியை நேற்றுக் காலை மீண்டும் சந்தித்துப் பேசினார்:

சுமார் இரண்டே முக்கால் மணி நேரமாக நடந்த பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் திரு: விஜேரத்தின பேசினார்:

'பேசசுக்களின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது. மாலையிலும் பிரதமர் காந்தியைச் சந்தித்துப் பேசவுள்ளேன். அப்போது சில பிரச்சினைகள் தீர்க்கப்படக் கூடும்' —என்று திரு: விஜேரத்தின சொன்னார்.

**ராஜீவ் கேட்டது**

கடந்த 31ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுக்களின்போது— வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழர் அமைப்புக்கள் தங்களுக்குள் மோதாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் ஆலோசனையைத் தெரிவியுங்கள்—என்று பிரதமர் காந்தி இலங்கை அமைச்சர்களிடம் கேட்டார்.

அதற்கு, இது விஷயத்தை கொழும்புக்குஅறிவித்து பதில் பெற்றுத் தருவதாக இலங்கை அமைச்சர்கள் பதிலளித்தனர் என்று இப்போது தெரிய வந்தது.

அமைச்சர் விஜேரத்தின வெளியுறவு அமைச்சர் திரு. நரசிமராவ்வையும் நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

**பேச்சை நோக்கி......**

புதுடில்லிப் பேச்சுக்கள் பலனளிப்பவையாக இருக்க வேண்டும் அல்லது பேச்சுக்கள் தொடர்ந்து நடக்கும் என்ற நம்பிக்கையுடன் முடிவடைவதாக இருக்க வேண்டும்.

முன்கண்ட நிலைப்பாட்டை வைத்தே இரு தரப்பினரும் புதுடில்லியில் பேச்சுக்களை நடத்துகின்றனர் என்று புதுடில்லியில் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன; (அ-எ)

## மரண அறிவித்தல்

**திருமதி**
**சோதிப்பிள்ளை சரவணமுத்து**
**(சோதி அக்கா)**

திருமதி சோதிப்பிள்ளை சரவணமுத்து 1 - 8 - 89 அன்று காலமாகி விட்டார். இவர் கந்தையா சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவியும், ஜெயராஜசேகரனின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் 2 - 8 89 புதன்கிழமை நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம்: இவ் அறிவித்தலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஜெயராஜசேகரன்
(1425)

## மரண அறிவித்தல்கள்

### திரு. லிகோறி ஆசீர்வாதம்

குருநகர் சென் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த லிகோறி ஆசீர்வாதம் 31-7-89 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரேசம்மா சின்னமலரின் அன்புக் கணவரும், எவஞ்சலின், மெடக்டலின், அலன், பிறின்ஸ் பிலிப், அஞ்சலின், போள் ஆகியோரின் அன்புத் தகப்பனும். றெட் றிக்கோ, பிரான்சிஸ் நீக்லஸ், செல்வராணி, சாந்தினி, குமார் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்: அன்னாரின் பூதவுடல் 1-8-89 அன்று நீர்கொழும்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

44/A, சென்: பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்.
லி. அலன்
(12685)

நாரந்தனை
### திருமதி இராமநாதன் தங்கம்மா

நாரந்தனை (ஊர்காவற்துறையைச்) சேர்ந்த திருமதி. இராமநாதன் தங்கம்மா காலமானார். இவர் இராமநாதன் அவர்களின் அருமை மனைவியும், கேதாரநாதன் (வருமானவரித்திணைக்களம்-கொழும்பு), இரகுநாதன் (வர்த்தகர் - அக்குரஸ்ஸ), திருஞானசம்பந்தன் (கிராம சேவையாளர், நயினமடு), பரமேஸ்வரி, சகுந்தலாதேவி பேரின்பநாயகி முன்னாள் D. O புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி. நே. கேதாரநாதன் (ஓய்வூதியக் கிளை, கச்சேரி யாழ்ப்பாணம்), சரவணபவான் (ஜேர்மனி), லோகேஸ்வரி, பேரானந்ததவமணி, சண்முகலிங்கம் (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவிதரன், சுகநந்தினி, புவிதரன், அருணோதயன், சுதர்சன், தாரிணி, யாழினி, கவிதா, சுகஸ்தன், கல்பனா, மாதங்கி, மதுரன், தீபாஞ்சலி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், வி. சி. முத்தையா (வர்த்தகர் அக்குரஸ்ஸ) அவர்களின் அருமைச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 03- 08- 89 வியாழக்கிழமை 3. 00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்: இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்:

தகவல்;
இ. கேதாரநாதன்.

நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்துறை.
(1436)

### கந்தர் இளையதம்பி வேலுப்பிள்ளை

(இளவாலை வடக்கு - மலாயன் பென்சனியர்)

இளவாலை வடக்கு மலாயன் பென்சனியர் திரு: க: இ. வேலுப்பிள்ளை அவர்கள் 30-07-1989 இல் இறைபதம் சேர்ந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோதிப்பிள்ளை, சின்னத்தங்கம், திரு: சங்கரப்பிள்ளை, திரு: விஸ்வலிங்கம், திரு. சிதம்பரப்பிள்ளை (மலாயன் பென்சனியர், விழிசிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கமலாம்பிகை, திரு: மகாதேவன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியம், திருமதி செல்வபாக்கியம், திருமதி சரஸ்வதி (ஆசிரியை, தெ.ப.கூ: சங்கம், நுண்மதிப் பாலர் பாடசாலை, கிளை 8), டாக்டர் குணசிங்கம் (லண்டன்), திரு: பாலசிங்கம் (குளோப் றேடேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), திரு: தருமராசசிங்கம் (முகாமையாளர், நந்தி இன்டஸ்ரீஸ் அன்ட் ஏஜென்ஸிஸ் லிமிட், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்). திரு: நவரத்தினசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. மூ: சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற புகையிரத தலைமைக் காப்பாளர்), திருமதி ம. விஜயசக்தியா (சிங்கப்பூர்), காலஞ்சென்ற திரு: வ, துரைசிங்கம், காலஞ்சென்ற திரு. ரங்கநாதன், திரு: த: ஆறுமுகம் (பொது முகாமையாளர், கட்டைவேலி ப. நோ. கூ: சங்கம்), திருமதி கு: மேனகாதேவி (லண்டன்), திருமதி பா: விஜயலட்சுமி, திருமதி த: கமலாதேவி, திருமதி ந: ரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி நாவுக்கரசன் சாந்தி (பிரதிப் பணிப்பாளர், இந்து விவகார அமைச்சு, கொழும்பு), செல்விகள் சுகந்தா (ஆசிரியை, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), வசந்தி (லிகிதர்), ரேணுகா, ஈஸ்வரி, கவிதா, பிரேமிளா (கணக்காளர், சிங்கப்பூர்), கிருபரன், தேவராஜன் (உற்பத்தி முகாமையாளர், பெயர்லைன்ஸ் குறூப், அக்குறனை), ரவீந்திரன் (நோர்வே), திருமதி அமிர்தலிங்கம், நளினி, யாழினி, ராஜ்குமார், ராஜினி, குமாரபரதன்: பவானி: குலதாசன். பிரபாசினி, காயத்திரி, துஷ்யந்தி, நவஜினி, சுயேன் ஆகியோரின் அன்புப் பேரனும், பிரவீனா, ராகுலன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

இறுதிக்கிரியைகள் 1989-08-03 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு நடைபெறும்: இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்:

தகவல்:
வே. தருமராசசிங்கம்

இளவாலை வடக்கு,
இளவாலை.
(1433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org